**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI**
**OS No. 16/2019**

**2025**ம் வருடம் செப்டம்பர் திங்கள் 12ம் நாள் பிரதிவாதி தரப்பில் 1வது சாட்சியத்தின் வாக்குமூலம் 1873ம் ஆண்டு 10வது விதியின் படி திரு.V.மனோஜ்குமார், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் : திரு. வினோத் (DW1) கிராமம்:
தகப்பனார் பெயர் :சுப்பிரமணியன் தொழில் :
வயது :

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் இவ்வழக்கின் 7, 8 பிரதிவாதிகளான கமுதி சோலார் பவர் தமிழ்நாடு லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற நபர் ஆவேன். என் தரப்பு வாய்மொழி சாட்சியத்தை எழுத்துமூலமான பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் என்னுடைய அறிவுக்கு முழுமையாய் தெரிந்த மட்டிலும் உண்மை என்று உறுதி கூறி இந்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள விபரங்களை எனது முதல் விசாரணையாக ஏற்றுக்கொள்ள பிரார்த்திக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

2. 12.09.2025ம் தேதியிட்ட 7, 8 பிரதிவாதிகள் நிறுவனம் தரப்பில் மேற்படி சாட்சிக்கு சாட்சியம் அளிக்க வழங்கப்பட்ட அதிகார ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 29.11.2010ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதி 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரம் அரசு இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 18.05.2015ம் தேதியிட்ட 3 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரைய பத்திரம் அரசு இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. தாவா சொத்திற்குரிய "அ"பதிவேடு விபரங்கள் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. 11.09.2025 ம் தேதியில் தாவா சொத்திற்குரிய பட்டாவை அரசு இணைய தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனவே பிராதை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்./–திருமதி. G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.